## மூன்றாம் கூடுதல் மாவட்ட/அமர்வு நீதிமன்றம், சேலம்

**முன்னிலை - திரு.வே.புகழேந்தி, இளநிலைச் சட்டம்,**
**மாவட்ட நீதிபதி**

**2026–ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 13–ஆம் நாள் வெள்ளிக்கிழமை**

**திருவள்ளுவர் ஆண்டு 2057 மாசித் திங்கள் 29–ஆம் நாள்**

**முதலேற்பு வழக்கு எண்411/2019 –இல்**
**வழக்கிடை விண்ணப்ப எண் 05/2026,**
**வழக்கிடை விண்ணப்ப எண் 06/2026**

**தீபக் பிரசன்னா** ...**மனுதாரர்/பிரதிவாதி.**

**–எதிர்–**

...**எதிர்மனுதாரர்/வாதி**

**சரவணன்**

இவ்விரு மனுக்களிலும் மனுதாரருக்காக வழக்குரைஞர் **திரு. K.M. சத்யசீலன்** அவர்களும் எதிர்மனுதாரருக்காக வழக்குரைஞர் **திரு.B. செந்தில்குமார்** அவர்களும் தோன்றினர். இவ்விரு மனுக்களும் இறுதி விசாரணைக்கு வந்தபோது இரு தரப்பினரும் முன்வைத்த வாதங்களை கவனத்தில் வைத்தும் வழக்குக் கோப்புகளை பரிசீலித்தும் இந்நாள்வரை நிலுவையில் இருந்துவந்த இவ்விரு மனுக்களிலும் இன்று இந் நீதிமன்றம் ஆணை பிறப்பிக்கிறது.

### பொதுவான ஆணையுரை

**முகவுரை**

வாதி தரப்பு 01-ஆம் சான்றாளரை குறுக்குவிசாரணை செய்வதற்காக வாதி தரப்பு 01-ஆம் சான்றாளரின் குறுக்குவிசாரணையை மீண்டும் திறக்கக் கோரியும் வாதி தரப்பு 01-ஆம் சான்றாளரை மீண்டும் அழைக்கக் கோரியும் உரிமையியல் நடைமுறைத் தொகுப்புச் சட்டத்தின் 151-ஆம் பிரிவின்கீழும் அதேத் தொகுப்புச் சட்டத்தின் 18-ஆம் வகுமுறையின் 17-ஆம் விதியின்-கீழும் இவ்விரு மனுக்களும் தாக்கல்செய்யப்பட்டுள்ளன.

III rd ADJ Court Salem

## மனுக்களின் சுருக்கம்

01. மனுதாரர் முதலேற்பு வழக்கில் பிரதிவாதி ஆவார். வாதி தரப்பு 01-ஆம் சான்றாளாரை ஏற்கனவே பகுதியாக குறுக்குவிசாரணை செய்திருந்த நிலையில் இவ்வழக்கானது தொடர் குறுக்குவிசாரணைக்காக 04.11.2025 ஆம் தேதியன்றுக்கு வழக்கெடுப்பிற்கு இருந்தது. மனுதாரருக்காக தோன்றும் மூத்த வழக்குரைஞருக்கு உடல்நலக்குறைவு ஏற்பட்டதால் அவரால் அன்று தோன்றி வாதி தரப்பு 01-ஆம் சான்றாளரை குறுக்குவிசாரணை செய்ய முடியவில்லை. வாதி தரப்பு 01-ஆம் சான்றாளரின் குறுக்குவிசாரணையை இந் நீதிமன்றம் தன்னிச்சையாக முடித்துவைத்தது. மனுதாரர்/பிரதிவாதிக்கு முதலேற்பு வழக்கில் நல்ல எதிர்வாதம் உள்ளது. ஆகையால், வாதி தரப்பு 01-ஆம் சான்றாளரை குறுக்குவிசாரணை செய்வதற்காக வாதி தரப்பு 01-ஆம் சான்றாளரின் குறுக்குவிசாரணையை மீண்டும் திறந்து வாதி தரப்பு 01-ஆம் சான்றாளரை மீண்டும் அழைத்து ஆணையிட வேண்டும். இல்லை யெனில் மனுதாரருக்கு ஈடுசெய்ய முடியாத இழப்பும் இன்னலும் ஏற்படு ம்.

## எதிருரைகளின் சுருக்கம்

02. இவ்விரு மனுக்களிலும் சொல்லப்பட்டுள்ள தவறுகைக்கான காரணங்கள் பொய்யானவை. இவ்விரு மனுக்களும் 16.02.2026-ஆம் தேதியன்றுதான் தாக்கல்செய்யப்பட்டுள்ளது. ஆனால் மனுவில் 04.11.2025 ஆம் தேதியன்று குறுக்குவிசாரணைக்காக வழக்கெடுப்பு இருந்ததாகவும் உடல் நலக்குறைவால் மூத்த வழக்குரைஞரால் தோன்ற முடியவில்லை என்றும் பொய்யாக சொல்லப்பட்டுள்ளது.

**03.** வாதி தரப்பு 01-ஆம் சான்றாளரை குறுக்குவிசாரணைசெய்ய 07.04.2025-ஆம் தேதியன்றுக்கு வழக்கெடுப்பு இருந்தது. அன்று குறுக்கு விசாரணை செய்யாததால் இந் நீதிமன்றம் மனுதாரர்/பிரதிவாதியை தோன்றாத் தரப்பினராக்கி ஆணையிட்டது. அந்த ஆணையை இரத்துச் செய்யக் கோரி மனுதாரர்/பிரதிவாதி தாக்கல்செய்த மனுவை செலவுத் தொகை செலுத்த வேண்டும் என்ற நிபந்தனையுடன் இந் நீதிமன்றம் அனுமதித்து வாதி தரப்பு 01-ஆம் சான்றாளரை குறுக்குவிசாரணை செய்வதற்கு மீண்டும் மனுதாரர்/பிரதிவாதிக்கு இந் நீதிமன்றம் வாய்ப்பு வழங்கியது.

**04.** வாதி தரப்பு 01-ஆம் சான்றாளரை தேவையான அளவிற்கு மனுதாரர்/பிரதிவாதி தரப்பில் குறுக்குவிசாரணை செய்துவிட்டனர். அவசியம் இல்லாமல் தொடர் குறுக்குவிசாரணை செய்ய வேண்டும் என்று ஒத்திவைப்பு பெற்றுவந்த மனுதாரர்/பிரதிவாதி குறுக்குவிசாரணையை நிறைவுசெய்ய முயற்சி செய்யாததால் இந் நீதிமன்றம் அந்த வாய்ப்பை முடித்துவைத்தது.

**05.** மனுதாரர்/பிரதிவாதி எதிர்மனுதாரர்/வாதியை அலைகழிக்கவும் இவ் வழக்கை முடிக்கவிடாமல் தொடர்ந்து காலதாமதப்படுத்தவும் வேண்டுமென்றே செயல்பட்டுவருகிறார். இந்த மனுவில் நல்லெண்ணம் இல்லை. ஆகையால், இந்த மனுவை எதிர்மனுதாரரின் செலவுத்தொகையுடன் தள்ளுபடிச் செய்ய வேண்டும்.

## தீர்வுகாண வேண்டிய விவாதக்கூறுகள்

**06. இவ்விரு மனுக்களும் அனுமதிக்கத்தக்கனவா?**



III rd ADJ Court, Salem

## தீர்முடிவு

**07.** இரு தரப்பு வாதங்களும் கேட்கப்பட்டன. வழக்குக் கோப்புகள் ஓர்வுசெய்யப்பட்டன. வாதி தரப்பு 01-ஆம் சான்றாளர் முதல் விசாரணை சாட்சியம் அளித்தபின் குறுக்குவிசாரணைக்காக 24.03.2025, 04.04.2025, 07.04.2025 ஆகிய நாட்களுக்கு வழக்கு ஒத்திவைக்கப்பட்டது. 07.04.2025 ஆம் தேதியன்று வாதி தரப்பு 01-ஆம் சான்றாளரை மனுதாரர்/பிரதிவாதி தரப்பில் குறுக்குவிசாரணை செய்யாததால் அவரை இந் நீதிமன்றம் தோன்றாத் தரப்பினராக்கி ஆணையிட்டது. அடுத்த வழக்கெடுப்பு நாளான 24.04.2025-ஆம் தேதியன்றுக்குள் மனுதாரர்/பிரதிவாதி தாக்கல்செய்த உரிமையியல் நடைமுறைத் தொகுப்புச் சட்டத்தின் 09-ஆம் வகுமுறையின் 07-ஆம் விதியின்கீழான விண்ணப்பம் சில ஒத்திவைப்புகளுக்குபின் 01.07.2025-ஆம் தேதியன்று அனுமதிக்கப்பட்டது. 08.07.2025, 14.07.2025, 22.07.2025, 29.07.2025, 04.08.2025, 12.08.2025, 25.08.2025, 02.09.2025, 09.09.2025, 12.09.2025 ஆகிய நாட்களுக்கு வழக்கு ஒத்திவைக்கப்பட்டது. மேற்சொன்ன வழக்கெடுப்பு நாட்களில் ஓரிரு நாட்களை தவிர மற்ற நாட்களில் வாதி தரப்பு 01-ஆம் சான்றாளர் தோன்றியிருந்தும் மனுதாரர்/பிரதிவாதி தரப்பில் குறுக்குவிசாரணை செய்யவில்லை. 22.09.2025-ஆம் தேதியன்று வாதி தரப்பு 01-ஆம் சான்றாளரை பகுதியளவு மட்டுமே மனுதாரர்/பிரதிவாதி தரப்பில் குறுக்குவிசாரணை செய்துவிட்டு தொடர் குறுக்குவிசாரணைக்காக வழக்கை ஒத்திவைக்கக் கோரியதால் 14.10.2025, 04.11.2025, 11.11.2025 ஆகிய நாட்களுக்கு வழக்கு ஒத்திவைக்கப்பட்டது. 11.11.2025-ஆம் தேதியன்றும் வாதி தரப்பு 01-ஆம் சான்றாளரை மனுதாரர்/

IIIrd ADJ Court, Salem

பிரதிவாதி தரப்பில் குறுக்குவிசாரணை செய்யாததால் குறுக்கு விசாரணைக்-கான வாய்ப்பை இந் நீதிமன்றம் முடித்துவைத்தது.

**08.** வாதி தரப்புக் கூடுதல் சாட்சியத்திற்காக வழக்கு ஒத்திவைக்கப் பட்ட நிலையில் வாதியுடன் வழக்கு விடயத்தை பேசித் தீர்த்துக்கொள்வதாக மனுதாரர்/பிரதிவாதி தரப்பில் கோரியதால் வழக்கு மக்கள் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுத் தீர்வாகாததால் மீண்டும் இவ்வழக்கு 03.02.2026 ஆம் தேதியன்று இந் நீதிமன்றத்திற்கே திரும்ப வந்தது. 01.12.2025-ஆம் தேதியன்று வாதி தரப்பில் கூடுதல் சாட்சியம் இல்லை என்று மேற்குறிப்பு செய்யப்பட்ட நிலையில் 16.02.2026-ஆம் தேதியன்று பிரதிவாதி தரப்பு சாட்சியத்திற்காக வழக்கு இருந்தபோது இவ்விரு மனுக்களும் மனுதாரர்/ பிரதிவாதி தரப்பில் தாக்கல்செய்யப்பட்டுள்ளது.

**09.** வாதி தரப்பு 01-ஆம் சான்றாளரை குறுக்குவிசாரணை செய்ய அளவுகடந்த வாய்ப்பு மனுதாரர்/பிரதிவாதிக்கு வழங்கப்பட்டிருக்கிறது. வாதி தரப்பு 01-ஆம் சான்றாளர் நீதிமன்றத்தில் தோன்றியிருந்தும் அவரை குறுக்குவிசாரணை செய்யாமல் 11.11.2025-ஆம் தேதியன்று பிரதிவாதியின் வழக்குரைஞருக்கு உடல்நலம் சரியில்லாமல் போனது என்று கூறியுள்ளது ஏற்புடையதல்ல. வாதி தரப்பு 01-ஆம் சான்றாளரை குறுக்குவிசாரணை செய்வதில் மனுதாரர்/பிரதிவாதி தரப்பில் நடந்துகொண்டவிதம் இந்த வழக்கை வேண்டுமென்றே காலதாமதப்படுத்த வேண்டும் என்ற மனுதாரர்/ பிரதிவாதியின் எண்ணத்தை காட்டுகிறது.

**10.** தரப்பினரின் சான்றாளர்களை குறுக்குவிசாரணை செய்வதற்கு இரு தரப்பினருக்கும் நியாயமான வாய்ப்பு வழங்க வேண்டும் என்று



III rd ADJ Court, Salem

உரிமையியல் நடைமுறைத் தொகுப்புச் சட்டத்தில் வகைசெய்யப்படிருப் பதை வழக்காடிகள் தங்கள் மனம்போன போக்கில் பயன்படுத்த அனுமதிக்க முடியாது. இந்த வழக்கில் வாதி தரப்பு 01-ஆம் சான்றாளரை ஏற்கனவே மனுதாரர்/பிரதிவாதி தரப்பில் குறுக்குவிசாரணை செய்துள்ளனர். மனுதாரர்/பிரதிவாதி இந்த வழக்கை நடத்துவதில் நடந்துகொண்ட ஒட்டுமொத்த நடத்தைகளையும் கவனத்தில்வைத்து இந்த மனுவை அனுமதிக்க முடியாது என்று இந் நீதிமன்றம் முடிவு செய்கிறது.

**இறுதிமுடிவு**

11. இறுதியாக, இவ்விரு மனுக்களும் தள்ளுபடிச் செய்யப்படுகின்றன.

**இந்த ஆணையுரை என்னால் சுருக்கெழுத்துத் தட்டச்சரிடம் சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சுச் செய்யப்பட்டு என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு 2026 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 13–ஆம் நாள் திறந்த நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.**

PUGAZHENTHI V Digitally signed by PUGAZHENTHI V
Date: 2026.03.13 19:20:06 +0530

**மூன்றாம் கூடுதல் மாவட்ட/அமர்வு நீதிபதி,**

**சேலம்.**

**இணைப்பு** – இல்லை

IIIrd ADJ Court, Salem